மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் - மறைந்த

# பேராயர் எஸ்றா சற்குணத்திற்கு - காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.28-**

**மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

உடல் நலக்குறைவால் 22.9.2024 அன்று காலமான மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் பேராயர் எஸ்றா சற்குணம் (வயது 86) அவர்களது உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.09.2024) காலை நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

எஸ்றா சற்குணம் அவர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தனது இறுதி நாள் வரை தொடர்ந்து சேவை ஆற்றி வந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் (26.9.2024) சென்னை, கீழ்ப்பாக்கம், கீழ்ப்பாக்கம் கார்டன் காலனியில் உள்ள கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரது உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல் நலக்குறைவால் காலமான இந்திய சமூக நீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சென்னை, வானகரத்திற்கு நேற்று முன்தினம் (26.9.2024) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், க.கணபதி, இந்திய சுவிஷேச திருச்சபை (ECI) பிரதம பேராயர் டாக்டர் டேவிட் ஒநேசிமு, சென்னை பேராயர் கதிரொளி மாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

முன்னாள் பிரதமர் - டாக்டர் மன்மோகன் சிங்கின்

# விலைமதிப்பற்ற சேவை எந்நாளும் நினைவுகூரப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 28 -

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் விலைமதிப்பற்ற சேவை எந்நாளும் நினைவு கூரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில் பாராட்டியுள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு எனது இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்!



**அவரது தொலைநோக்கு மிகுந்த தலைமைத்துவமும், இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைப்பதில் விலைமதிப்பற்ற சேவையும் எந்நாளும் நினைவுகூரப்படும்.**

**அடுத்து வரும் பல தலைமுறைகளைத் தமது மதிநுட்பத்தாலும் அர்ப்பணிப்பாலும் அவர் தொடர்ந்து ஊக்குவிக்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேனாள் அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு பிணை

# வரவேற்கப்படக் கூடிய மனித உரிமைக்கான சட்டத் தீர்ப்பு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 28-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மேனாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மீது ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை போட்டுள்ள வழக்கில், கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து வரும் அவருக்கு 470 நாள்களுக்குப் பிறகு உச்சநீதிமன்றம் பிணை (ஜாமீன்) வழங்கியிருக்கிறது.

பொதுவாக உச்சநீதிமன்றத்தின் பல பிணை



வழக்குத் தீர்ப்புகளில், பிணை வழங்குவதில், ஒரு பொது சட்ட மரபு, முன்மாதிரிகளும் எப்போதும், "பிணை என்பது விதி, சிறை என்பது ஒரு விதிவிலக்கு" என்று குறிப்பிடப்பட்ட நிலையில், இவரது வழக்கில் இவருக்கு இப்போதுதான் நீதி வழங்கப்பட்டு இருப்பது, தாமதித்து வழக்கப்பட்டிருக்கிறது என்றாலும், தவறக்கூடாத சிறப்பான தீர்ப்பு இது!

இதில் அமலாக்கத் துறையின் அதீதமான போக்கினையும் ஒதுக்கி, நியாயம் கிடைத்துள்ளது, வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

ஒரு சில நிபந்தனைகளுடன் பிணை கொடுக்கப்பட்டு, சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார்.

மனித உரிமைக் கண்ணோட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கிய தீர்ப்பு இது! நமது அரசமைப்புச் சட்டம் வாழுகிறது இதன் மூலம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.

# புழல் சிறை முன்பு - செந்தில் பாலாஜியை - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வரவேற்றார் - கழகத்தினர் திரண்டனர்!

சென்னை, செப். 28-

உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியதை அடுத்து, செந்தில் பாலாஜி சிறையில் இருந்து வெளியே வந்தார். புழல் சிறையில் இருந்து விடுதலையான செந்தில் பாலாஜிக்கு தி.மு.க. தொண்டர்கள் மேளதாளம் முழுங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கடந்த ஆண்டு ஜுன் 14ம் தேதி செந்தில்பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்தது. இவ்வழக்கில் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த ஜாமீன் மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. இந்நிலையில், உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து 471 நாட்களுக்குப் பிறகு செந்தில்பாலாஜிசிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். புழல் மத்திய சிறையில் இருந்து வெளியே வந்த செந்தில்பாலாஜிக்கு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மாலை அணிவித்து வரவேற்றார். அங்கு திரண்டிருந்த திமுக தொண்டர்கள் மேளதாளம் முழங்க, மலர்களை தூவி அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**கலைஞர் நினைவிடத்தில் செந்தில் பாலாஜி மரியாதை!**

**அமைச்சர் க.பொன்முடி பங்கேற்பு!**

இதைத்தொடர்ந்து, சென்னை மெரினாவுக்குச் சென்ற செந்தில்பாலாஜி, அங்கு பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்திலும் செந்தில் பாலாஜி மலர் தூவி மரியாதை செலுத்தினார். கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் க.பொன்முடி உள்ளிட்ட கழக முன்னணியினர் உடனிருந்தனர்.

**கு.செல்வப்பெருந்தகை**

செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கிடைத்திருப்பதன் மூலம், ஜனநாயகம் வென்றுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். பாசிசத்திற்கு எதிராக குரல் கொடுப்பவர்களை பாஜக அரசு கைது செய்து வருடக்கணக்கில் சிறையில் அடைப்பதாக குற்றம்சாட்டியுள்ள செல்வப்பெருந்தகை, குற்றம்சாட்டப்பட்டவர்கள் பா.ஜ.க.வில் சேர்ந்துவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை எனசாடினார்.

**கே. பாலகிருஷ்ணன் வரவேற்பு!**

அமலாக்கத்துறை வழக்கில் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கப்பட்டு இருப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது. 471 நாட்கள் கழித்து ஜாமீன் வழங்கப்பட்டு இருப்பதாகவும், இதுவே ஒரு தாமதமான தீர்ப்புதான் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**இரா.முத்தரசன் வரவேற்பு!**

செந்தில் பாலாஜி பிணையில் விடுவித்திருப்பதை வரவேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் ஆணையம், புலனாய்வுத் துறை, அமலாக்கத்துறை, நீதிமன்றங்கள் உள்ளிட்ட சுயேட்சையான ஜனநாயக அமைப்புகளை முடக்கி பா.ஜ.க. அரசு தனதாக்கிக் கொண்டதாக குற்றம்சாட்டியுள்ளார். 15 மாதங்களாக சிறை வைக்கப்பட்ட நிலையில், தற்போது செந்தில் பாலாஜிக்கு பிணை கிடைத்திருப்பது ஆறுதல் அளிப்பதாகவும், பிணையில் விடுவிக்க உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**ஈஸ்வரன் வரவேற்பு!**

தமிழ்நாடே எதிர்பார்த்த தீர்ப்பு இன்று வெளியாகி இருப்பதாக கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈஸ்வரன் தெரிவித்துள்ளார். உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்றுள்ள ஈஸ்வரன், தீர்ப்பு தாமதமாக வந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

## முதலமைச்சருக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி! – செந்தில்பாலாஜி பேட்டி!

*செய்தியாளர்களிடம் பேசிய செந்தில் பாலாஜி, "என் மீது அன்பும் நம்பிக்கையும் வைத்துள்ள முதலமைச்சருக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்துவேன்"*

*- என்று குறிப்பிட்டார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மேலும், அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தன் மீது போடப்பட்ட பொய் வழக்கை சட்ட ரீதியாக எதிர்கொண்டு விரைவில் மீண்டு வருவேன் என்றும் அவர் கூறினார்.*

விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க.

# மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், செப். 28-

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (29.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

மாவட்ட கழக பொறுப்பாளராகிய எனது (டாக்டர் பொன்.கௌதமசிகாமணி) தலைமையில்



நடைபெற உள்ள கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர்ம.ஜெயச்சந்திரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா , டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் டி. என்.முருகன் , தயா.இளந்திரையன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கழக துணைப் பொதுச் செயலாளர் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

நிகழ்வில் மாநில மகளிர் அணி இணை செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் தமிழ்நாடு திருநங்கையர் நலவாரிய உறுப்பினர் ஏ.ரியா, மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் திருமதி மோ.தேன்மொழி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொள்கின்றனர்.

கூட்டத்தில் விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ( மகளிர் ) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பவளவிழாப் பொதுக்கூட்டத்தில்

# திருவாரூர் மாவட்டத்திலிருந்து பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை!

திருவாரூர்,செப்28.

காஞ்சிபுரம் கழக பவள விழா பொதுக் கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக பங்கேற்க அழைப்பு விடுத்து பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் காஞ்சிபுரத்தில் நடைபெறும் கழக பவள விழா மாநாட்டில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் இருந்து பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.



எனவே கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் பவள விழா பொதுக்கூட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.